1982 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) (1) லெவி சர்க்கரைக்கு ஆலைவாயில் விலையில் 13.175 சதவீதம்.

(2) வெளிச் சந்தைச் சர்க்கரைக்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் வரி விதிப்பு மதிப்பில் (Tariff Value) 15.9 சதவீதம்.

(ஆ) இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மக்கள் உபயோகப்படுத்தக் கூடிய அத்தியாவசியப் பொருள்களின் விலை நான்கு பணம் என்று சொன்னால், அதற்கு போடக் கூடிய கலால் வரி, சுங்க வரி 3/4 பணம் என்ற வகையில் மக்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே இத்தகைய அத்தியாவசியப் பொருள்கள் மீது போடப்பட்டிருக்கும் கலால் வரி, சுங்க வரிகளை மத்திய அரசு நீக்க வேண்டும் என்று மாநில அரசு ஏதாவது எழுதி இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இதுவரையில் எதுவும் எழுதவில்லை.

குளச்சல் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மணல்.

*வினா எண். 57—திருவாளர்கள் திரு. ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்தில் 1979–80 மற்றும் 1980–81-ல் மணவாளக்குறிச்சியிலிருந்து சேகரிக்கும் மணல் (மோனசைட்) எவ்வளவு ஏற்றுமதியாயிற்று ?

(ஆ) இதில் அயல்நாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதியாகி உள்ளது ?

(இ) இதனால் கிடைத்த அயல்நாட்டு செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) குமரி மாவட்டத்தில் குளச்சல் துறைமுகத்திலிருந்து மோனசைட் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் அங்கிருந்து ஆல்வாய்க்கு அனுப்பப்படுகின்றது.

(ஆ) பதில் எழவில்லை.

(இ) பதில் எழவில்லை.

1982 பிப்ரவரி 5]

[முற்பகல் 10-10]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மணவாளக் குறிச்சியில் உள்ள இந்தியன் ரேர் எர்த்ஸ்-க்குச் சொந்தமான பாக்டரியில் உற்பத்தி செய்யக்கூடிய இல்மினைட், சிர்கான், போன்ற பொருள்களில் இருந்தும் அதே போல் மோனோஸைட்டிலிருந்தும் தமிழக அரசுக்குக் கிடைக்கக் கூடிய வருவாய் என்ன ? மேலும் அந்தப் பொருள்களை உபயோகப்படுத்தி டைட்டானியம் டை ஆக்ஸைட், டைட்டானியம் மெட்டல் போன்ற பொருள்களை உற்பத்தி செய்து அதன் வழியாக அதிகமான அளவிற்கு வருவாயைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே அந்தப் பொருள் களை உற்பத்தி செய்வதற்கான தொழில் ஸ்தாபனங்களை ஏற் படுத்துவதற்கு தமிழக அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மூலக் கேள்வி அன்னியச் செலாவணி பற்றியது. அன்னியச் செலாவணி இல்லை என்று சொன்னேன். மற்றபடி தொழில்கள் துவங்கு வதற்கு, அவற்றை வைத்துக் கொண்டு என்னென்ன தொழில் களைத் துவங்கலாம் என்பது பற்றிய விவரங்களுக்கு தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தரலாம்.

திரு. டி. மணி : குளச்சல் துறைமுகத்தில் ஏற்றுமதியாகிற மணல் மற்றப் பொருட்கள் கரை வழி ஒரு மைல் தாண்டித் தான் கப்பலுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தத் துறைமுகத்தை விஸ்தரிக்கக் கூடிய அளவிற்கு கரையோரமாக கப்பல் வந்து செல்ல முயற்சி மேற்கொள்ளப்படுமா !

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இந்தக் கேள்வியை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அன்னியச் செலாவணி எவ் வளவு கிடைக்கிறது என்று கேட்டேன். மோனாஸைட் மட்டும் அல்ல. விமானங்கள் தயாரிக்க உபயோகப்படுத்தக் கூடிய இல்மினைட் போன்ற பொருள்கள் வெளிநாடுகளுக்கு, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அதிலிருந்து அன் னியச் செலாவணி கிடைக்கப்பெறவில்லையா ? அதில் எவ்வளவு விகிதம் தமிழக அரசுக்குக் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : நம்முடைய மாநிலத் திலிருந்து நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வில்லை. அதன் காரணமாக எந்தவிதமான அன்னியச் செலா வணியையும் நாம் பெறவில்லை.